வியாபாரிகளே!
அழகுசாதன, இமிற்றேசன், எவர்சில்வர், பாடசாலைப் பொருள்களை
மொத்தமாகக் கொள்வனவு செய்ய:
ஜெயா
அழகுசாதன மாளிகை,
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(29495)

நன்கு

# உதயன்

விலை ரூபா 5-00

மொத்தமாக கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கும் நிறுவனம்
ஜெயா
அழகுசாதன மாளிகை,
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(29495)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 10 செவ்வாய்க்கிழமை (22 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 87

# வடக்கு மீதான பொருளாதாரத் தடையை நீக்க புதிய நிபந்தனை விதிக்கிறார் ரணில்

## ஆனையிறவுப் பாதையை புலிகள் திறக்க வேண்டுமாம்

கொழும்பு, பெப்ரவரி 22

வடபகுதி மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதானால், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பாதையைத் திறந்து விட வேண்டும் என்று பிரதமர் திரு, ரணில் விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார்,

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதமர் ரணில் இந்த நிபந்தனையை விதித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும்; இல்லையேல் பேச்சுக்கள் நடத்துவதற்கே இடமில்லை — என்றும் ரணில் சொன்னார்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இனப்பிரச்சினை, சமாதானப்பேச்சு என்பன தொடர்பாகக் கூறியதாவது:-

பொதுமக்கள் பிரயாணம் செய்யும் வகையில் ஆனையிறவு பாதையைத் திறந்து, யாழ். பிராந்தியத்தைப் பிற பகுதிகளுடன் இணைப்பதற்கு புலிகள் தொடர்ந்து மறுத்து வந்தால்—

பொருளாதாரத் தடை என்பது புலிகள் தாங்களாகவே விதித்துக் கொண்ட ஒன்று என்றே கணக்கிடப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்ளாவிட்டால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்துவதற்கே இடமில்லை.

அரசமைப்பு சீர் திருத்தங்கள் பற்றிய தங்கள் ஆலோசனைகளை விடுதலைப்புலிகள் அது தொடர்பாக நியமிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 7,500 பரல் மண்எண்ணெய் அடுத்த வாரம் வந்து சேரும்

யாழ். மாவட்டத்துக்கான 7 ஆயிரத்து ஐந்நூறு பரல் மண்எண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறை வரவுள்ளது.

ஜனவரி மாதத்துக்கான எஞ்சிய கோட்டாவான 2 ஆயிரத்து ஐந்நூறு பரல் மண்எண்ணெயும் இம் மாதத்திற்கான 5 ஆயிரம் பரல் மண்எண்ணெயுமே 'மாஹோ' கப்பலில் இங்கு எடுத்து வரப்படவுள்ளன.

மண்எண்ணெய் பரல்களை கப்பலில் ஏற்றும் வேலைகள் கொழும்பு துறைமுகத்தில் ஆரம்பமாகியுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்று கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்படும் மண்எண்ணெய் வழமைபோல் இம்முறையும் பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என யாழ். செயலக புள்ளி வாழ்வு பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5-9)

## 443 தபால் பொதிகள் வந்தன இறக்குவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், பெப். 22

நேற்று வடக்கே வந்து சேர்ந்த கோமாரி கப்பலில் 443 தபால்பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. ஆனால் அவை மூன்று நாட்களின் பின்னரே கப்பலில் இருந்து இறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரத்து 600 மெற்றிக் தொன் மா, 700 மெற்றிக் தொன் சீனி, 500 மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் ரவை மற்றும் பால்மா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மருந்து ஆகியவை இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று மாலை பருத்தித்துறைக்கு வந்த 'கோமாரி' கப்பல், யாழ். பல்கலைக்கழகம் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றுக்குரிய நூறு பரல் எரிபொருளை இறக்கிவிட்டு உடன் காங்கேசன்துறைக்கு திரும்பிச் சென்றது.

படையினருக்காக கப்பலில் ஏற்றி வரப்பட்டிருக்கும் விறகை காங்கேசன் துறையில் இறக்கிவிட்டு — மூன்று தினங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழக மீனவர் மீது தாக்குதல்: ஜெயலலிதா கடும் சீற்றம்! நஷ்டஈடு கோருகிறார்!!

சென்னை, பெப். 22

கடந்த சனிக்கிழமை கச்சதீவை அண்டிய கடற்பிரதேசத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு மீனவர்களைக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா கடும் சீற்றம் கொண்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தை ஆட்சேபித்து இலங்கையிடம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கும்படியும் —

இரு மீனவர்கள் உயிரிழந்ததற்கும், ஐந்து மீனவர்கள் காயமுற்றதற்கும் ஸ்ரீலங்கா கடற்படையினரே காரணம் என்பதால் ஸ்ரீலங்கா அரசிடமிருந்து அதற்குரிய நஷ்டஈட்டைப் பெற்றுத் தருமாறும்—

இப்பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராவுக்கு தாம் எழுதிய கடிதத்தில் தமிழக முதல்வர் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்த ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என முன்னர் பலமுறை தாம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்ததையும் தமது தற்போதைய கடிதத்தில் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-க-த-6)

## மீனவர்கள் சுடப்பட்டனரா? ஸ்ரீலங்கா கடற்படை மறுப்பு

கொழும்பு, பெப். 22

தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படுவதை ஸ்ரீலங்கா கடற்படை மறுத்திருக்கிறது.

அத்தகைய சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என தமது நாட்டின் கடற்படை மறுத்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

"தூரதர்ஷன்" இத்தகவலை வெளியிட்டது.

ஸ்ரீலங்கா கடற்பகுதியில் இந்திய மீனவர் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக கூறப்படுவது குறித்து ஸ்ரீலங்கா அதிகாரிகள் இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் —

விடுதலைப் புலிகள் அதிவேக ஜெட் படகுகளைப் பாவிப்பதால் மீனவர் பிரச்சினை மோசமடைந்துள்ளதாகவும் —

பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய – ஸ்ரீலங்கா கடற்படைகள் கூட்டு ரோந்து நடத்துவது குறித்து பேச்சுக்கள் இடம்பெற்றுவருவதாகவும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார். (உ-த)

## கச்சதீவுப் பிரச்சினையில் இலங்கை ஏமாற்றிவிட்டது

### வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, பெப். 22

கச்சதீவுப் பிரச்சினையில் இலங்கை அரசு இந்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறிவிட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

1974 இல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, கச்சதீவுப் பகுதி இலங்கைக்கு சொந்தமானது. ஆனால் இந்திய மீனவர்கள் தங்களது வலைகளை இங்கு உலர்த்தி, இளைப்பாறவும் —

இந்திய — இலங்கை பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பில் அங்கு சென்று வரவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இலங்கை அரசு ஒப்பந்தப்படி நடக்கவில்லை. அதனால் அ. தி. மு. க. அரசு கச்சதீவை இந்தியா திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆர்வம் காட்டுவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-எ)

## இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப். 22

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## மீண்டும் வாராந்த செய்தியாளர் மாநாடு

கொழும்பு, பெப். 22

அரச தரப்பினால் முன்னர் வாராந்தம் கூட்டப்பட்டு வந்த பாதுகாப்புத்துறை செய்தியாளர் மாநாடு மீண்டும் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் வாரம் தோறும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு கிழக்கு நிலைமை பற்றி செய்தியாளர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதல்

சுழிபுரம், பெப். 22

நேற்றுக் காலை 8 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் சுழிபுரம் திருவடிநிலை கடற்பகுதியில் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

சுமார் அரைமணி நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலைத் தொடர்ந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கடலில் கைவிட்டு கரை வந்து சேர்ந்தனர். (த-28)

## முச்சந்தி முரளி



உவர் ஆட்சிக்கு வந்ததே அவையளின்ரை ... தானே.....?

## வெடிகுண்டு வாகன 'கராஜ்' கொழும்பில் சுற்றிவளைப்பு

### 15 பேர் கைது என அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

விடுதலைப்புலிகளின் வெடிகுண்டு வாகனம் தயாரிக்கும் நிலையம் என்று கருதப்படும் கொழும்பு ஆமர் வீதியில் உள்ள விசாலமான 'கராஜ்' ஒன்றை விஷேட பொலிஸ் குழு நேற்று முன்தினம் இரவு சுற்றி வளைத்ததாக கொழும்பில் தெரிக்கப்பட்டது.

அங்கு தீவிரவாதிகள் என்று சொல்லப்படும் பதினைந்து நபர்களை பொலிஸார் கைது செய்தனர் என்று உயர் நிலைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சுற்றி வளைப்புத் தேடுதலின் போது, குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-6)

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 22

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் நேற்று அதிகாலை வரை ஏழாலை வடக்கு, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன. இடையிடையே கலிபர் தாக்குதலும் இடம்பெற்றது.

பெரும் சத்தத்துடனும் அதிர்ச்சியுடனும் வெடித்த ஷெல்களினால பீதியுற்ற ஏழாலை வடக்கு, புன்னாலைக்கட்டுவன் பகுதி மக்கள் இரவோடு இரவாக இடம் பெயர்ந்தனர்

நேற்று முன்தினம் முற்பகலிலும் இப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. (உ-13-15)

## 125 பயணிகளுடன் நரோமா முதலாம் திகதி வடக்கே வரும்

திருகோணமலையில் இருந்து 125 பயணிகளுடன் நரோமா கப்பல் எதிர்வரும் முதலாம் திகதி காங்கேசன்துறைக்கு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மாதத்தில் இரு தடவைகள் திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடவிருக்கும் இக்கப்பல் இம்முறை எதிர்வரும் 28 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து புறப்பட்டு மறுநாள் காங்கேசன்துறை வரும்.

இங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் அன்றே 'நரோமா' திருமலை திரும்பும். (உ-3)

## 74 வீதத்தினரின் தலைவிதியை 22 வீதத்தினர் நிர்ணயிப்பதா?

### ஜனாதிபதி விஜேதுங்கா கேள்வி

கொழும்பு, பெப். 22

இந்த நாட்டில் உள்ள 74 சதவீதமான பெரும்பான்மை இனத்தவரின் தலைவிதியை 22 சதவீதமான சிறுபான்மை இனத்தவர் நிர்ணயிப்பதற்கு இடமளிக்க முடியுமா? ஜனாதிபதி விஜேதுங்கா முன்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மொனறாகலை மாவட்ட ஐ. தே. க. சம்மேளனத்தின் கூட்டத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு கேட்டார்.

இந்த நாட்டின் ஆட்சி எப்... பெரும்பான்மை இனத்தவரின் ... இருக்கவேண்டும்.

எனினும் சிறுபான்மை இனத்துக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது பெரும்பான்மை இனத்தவரின் கடமை — என்றார் அவர்

தமது உயிருக்கு ஆபத்து ஏற்படினும் இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்தும் போராட்டத்தை எதிர்காலத்திலும் தாம் தொடர்ந்து நடத்தப் போவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மொனறாகலை மக்கள் மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. (உ-எ-6)

## சமாதான மரதன் ஓட்டம்: பொலீஸார் தடை விதிப்பு

### மக்களை அடித்து விரட்டினர்

கொழும்பு, பெப். 22

படுகொலை செய்யப்பட்ட பிரபல பத்திரிகையாளர் றிச்சட் டிசொய்சாவின் நினைவு தினத்தை ஒட்டி மொரட்டுவை ஹோருள்ளவல்லவில் இருந்து ஆரம்பமாகவிருந்த சமாதான மரதன் ஓட்டப் போட்டியை பொலீஸார் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் சமாதான மரதன் ஓட்டப்போட்டி ஆரம்பமாகவிருந்தது. அப்போது முன்னணி வீரர் ஏந்தியிருந்த சமாதான தீப்பந்தத்தை பொலீஸார் பறித்து எடுத்தனர் என்றும்

பின்னர் ஓட்டப்போட்டியை நிறுத்துமாறு ஓட்ட வீரர்களையும் அமைப்பாளர்களையும் பொலீஸார் பணித்ததாகவும்—

அதன்பின்பு பாதையைத் தடைசெய்து விட்டு, அங்கு திரண்டிருந்த மக்களை விரட்டியடித்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-எ 6)

## தென்மாகாணத் தேர்தல்; அரச தரப்பினர் வன்முறை

தென் மாகாண சபைக்கான தேர்தலை ஒட்டி அரசதரப்பினர் ஏற்கனவே வன்செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டதாக செய்திகள் தெரிவித்தன.

அமைச்சர் பதவியை வகிக்கும் தென் மாகாணத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் தேர்தல் விதிகளுக்கு முரணாக மூன்று கிராம சேவையாளர்களை தமது வீட்டுக்கு அழைத்து தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமக்குச் சார்பாக செயல்படுமாறு அந்த அரசியல்வாதி கிராமசேவையாளர்களைப் பணித்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் சில அரச ஆதரவாளர்கள் சில வீடுகளுக்குச் சென்று அரசுக்குச் சார்பாக வாக்களிக்கும்படி பயமுறுத்தல் மற்றும் நிர்ப்பந்தம் ஆகியவற்றை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## 50 தலைமுறைக்குச் சொத்து ஆயுத வர்த்தகர்கள் சேர்ப்பு

கொழும்பு, பெப். 22

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வரும் வர்த்தகர்களில் சிலர் தங்களின் ஐம்பது பரம்பரைகளுக்குத் தேவையான நிதிவளத்தைச் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

தென் மாகாண சபைத் தேர்தலை ஒட்டி ஹினிதுமத்தொகுதி பிற்றிகலையில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடையக்கூடிய சாத்தியம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டி கடற் பகுதியில் இரவில் மீன் பிடிக்கத் தடை

கொழும்பு, பெப். 22

கற்பிட்டி, அறுவக்காடு, குதிரைமலை, காரைதீவு ஆகிய பகுதிகளில் மீன் பிடிப்பது மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தடைசெய்யப்பட்ட பகுதிகளில் — தடைசெய்யப்பட்ட நேரங்களில் — மீன் பிடித்தலில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும்

அவர்களின் மீன் பிடி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டியில் நீர்வள, கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

கற்பிட்டிப் பகுதி மீனவர்கள் தொழில் புரிவதற்கு இராணுவம் மற்றும் கடற்படை பாதுகாப்பு வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி மீனவர்களிடமிருந்து கடலில் வைத்து டீஸல், படகு இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அடிக்கடி கொள்ளையிடப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-எ)

## வெள்ளை கொடியுடனேயே இனி கடலில் இறங்குங்கள்!

### கற்பிட்டி மீனவருக்கு அறிவுறுத்து

புத்தளம், மன்னார் பகுதிகளில் மீன்பிடித்தலில் ஈடுபவர்கள் தங்கள் வள்ளங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்ட வண்ணம் தொழில் புரிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கற்பிட்டியில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு சுந்தோர் மேசைகள், ஒரு மீன்தொட்டி, ஒரு அலுமாரி, ஒரு வோஷிங் பேசின் - ஸ்ரீல் விற்பனைக்கு உண்டு. சி. நாதன், இல: 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (29560)

நல்இன சைனா பான் டெயில் புறாக்கள், ஒரு லேடீஸ் சைக்கிள் (R M. I.) ஒரு சோடி உழவு மாடுகள், ஒரு சிறிய (24x1½) சைக்கிள் விற்பனைக்குண்டு. ந. வரதராசா, ராஜ் கோபால் ஸ்ஸ்டோர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (29546)

### கணக்காளர் தேவை

G. C. E. A/L கணக்கியல் படித்த பெண் கணக்காளர் தேவை. ஆங்கில, தமிழ் தட்டச்சு (Typing) தெரிந்திருத்தல் வேண்டும். யாழ். மாநகர சபைக்கு அண்மையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். கு. வி. அச்சகம், புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6986)

### தவறிவிட்டது

துணைவி ஆ. மி. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் தீர்மானிக்கப்பட்டபடி பாடசாலை கட்டட நிதிக்காக கலைவாணி சனசமூக நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட ஒளிப்படப்பிரதி கைதவறவிடப்பட்டுள்ளது. கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகத்தினர். (29564)

### மணிக்கூடு திருத்தவேலை

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/7215)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஒ)

## பேடன் பவல் தினம்

யாழ்ப்பாணம், பெப். 22

இலங்கை சாரணர் சங்க யாழ். மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபு தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் கௌரவ விருந்தினராகவும், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் பங்கேற்பார்கள் (ஒ-3)

## விமானப்படை தலைமை அதிகாரி நியமனம்

கொழும்பு, பெப். 22

ஸ்ரீலங்கா விமானப்படையின் தலைமை அதிகாரியாக எயர் கொமடோர் எல்சன் பீரிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

முன்னர் இப்பதவியை வகித்த ஒலிவர் ரணசிங்கா விமானப்படையின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்தே அவரின் இடத்துக்கு எல்சன் பீரிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

தற்போது எம். ஐ 8 ரக விமானக் கொள்வனவு விடயமாக ரஷ்யாவுக்குச் சென்றுள்ள இவர் நாடு திரும்பியதும் புதிய பதவியை ஏற்றுக்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-3)

---

# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்
# 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

## பதினோராம் நாள் - இன்று

திருநெல்வேலி ஜெகன் வர்த்தக நிலைய ஆதரவில்

மாலை

**4.00 — 5.00** மங்கள இசை
- கே. ராமதாஸ், எஸ். சுதிரமலை — நாதஸ்வரம்
- கைதடி கே. பழனிமலை, பி. பஞ்சமூர்த்தி, பி. பால நந்தீஸ்வரன் — தவில்

**5.00 — 5.10** மிருதங்க இசை
- ம. தவேந்திரன், ம. குவேந்திரன், ம. கஜேந்திரன், ம. லோகேந்திரன்

**5.10 — 5.25** பாட்டு
- பி. குமுதினி, கே. சஜினி, ஈ. அமிழ்தினி, பி. சங்கீதா, ஏ. சுந்தரவதனி, பி. மதுரா, எஸ். அன்புச்செல்வி, எம். ஜனனி, கே. ப்ரணவமலர், வீ. சாந்தி, கே. ப்ரதீபா — பாட்டு
- ரி. ரேணுகா — வயலின்
- ரி. தபோதநாயகம் — மிருதங்கம்

**5.30 — 5.45** வீணை இசை
- எஸ். பவதாரிணி, ஜே. அமுதா, எஸ். கானப்ரியா, ஏ. கர்ஷினி, ந. அபிராமி, எஸ். சுகந்தி — வீணை
- பி. ரதிரூபன் — மிருதங்கம்

**5.45 — 6.15** பாட்டு
- கே. நீதிமதி — பாட்டு
- ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
- கே. ஆதவன் — மிருதங்கம்

**6.15 — 7.00** பாட்டு
- மேரிசறோஜா ஜஸ்டின் — பாட்டு
- பாக்யலட்சுமி நடராஜா — வயலின்
- எஸ் துரைராஜா — மிருதங்கம்

**7.00 — 7.30** மங்கள விளக்கேற்றல்
- திரு. சி. ஜெகசீலன் (ஜெகன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி)
- திரு. பி. செந்தில் (குமரன் ரெக்ரையில்ஸ்)
- திரு. தனபாலசிங்கம் (அம்பாள் வர்த்தக நிலையம்)
- திரு. வ. மகேஸ்வரன் (நியூ சுபமாலா)

அருள் உரை:
சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் (பிரதமகுரு சிவன் கோயில் வல்வெட்டித்துறை)

தலைவர்:
எஸ். நவரத்தினராஜா (மின்சார பொறியியலாளர்)

பிரதம விருந்தினர்:
எம். ராமதாஸன் (மராமத்துப் பொறியியலாளர்)

சிறப்பு விருந்தினர்:
பி. தவராஜா (மராமத்துப் பொறியியலாளர்)

**7.30 — 8.30** இசைக் கச்சேரி
- பொன். ஸ்ரீ வாமதேவன் — பாட்டு
- ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
- எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்

**8.30 — 9.30** பரதநாட்டியம்
''சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகள்''
தயாரிப்பு: புனிதகுமாரி ஏரம்பமூர்த்தி, விமலகுமாரி ஸ்ரீ ரவிகுலன்

கலா ரசிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்!
**"இராஜன் இசையகம்" இசைக் கருவி திருத்தகர்,**
கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி-7321]

---

# இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோகலீலா தேவசுந்தரம் அவர்களின் தந்தையார்

## திரு. சு. கந்தையா

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

---

அரசின் அசட்டையால்

# குடாநாட்டில் தாதியருக்கு பற்றாக்குறை ஏற்படும்

யாழ். மாவட்டத்தில் அடுத்த மூன்று வருடங்களுக்கு வைத்தியசாலைகளில் தாதியர் குடும்பநல சேவையாளர் எவரும் புதிதாக நியமிப்பதற்கு முடியாத இக்கட்டான நிலை உருவாகியுள்ளது.

சென்ற 1992ஆம் ஆண்டிற்குப் பின் மாவட்டத்திய தாதியர்களுக்கும், குடும்ப நல சேவையாளர்களுக்கும் புதிதாக பயிற்சிகள் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தொடரும் மூன்று ஆண்டுகளுக்கு பெருகி வரும் சனத்தொகைக்கு ஏற்ப யாழ். குடாநாட்டு ஆஸ்பத்திரிகளில் தாதியருக்கு பற்றாக்குறை ஏற்பட்டு நோயாளரை சரிவரக் கவனிக்க முடியாத அவலநிலை ஏற்படும் ஆபத்து உள்ளதாக வைத்தியத்துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் ஒரே தடவையில் 200 தாதியருக்கு பயிற்சி அளிக்கக்கூடிய வசதிகள் இருந்தும் அரசு இதில் அக்கறையில்லாது அசட்டையீனமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, குடும்ப நல சேவையாளர் 250 பேர் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது 56 பேர் வரையே கடமையாற்றுகின்றனர். 3ஆயிரம் பேருக்கு ஒரு குடும்ப நல சேவையாளர் என்ற அடிப்படையில் தென்பகுதியில் கடமையாற்றுகின்ற போதும், இங்கு 12 ஆயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையிலேயே குடும்ப நல சேவையாளர்கள் பணியாற்றுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

## இசைவிழாவில் இன்று

இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் பதினோராம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை மேரி சறோஜா ஜஸ்டின், பொன் ஸ்ரீவாமதேவன் ஆகியோரின் பாட்டும், சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகளின் பரத நாட்டியமும் நடைபெறும்.

இன்றைய விழாவுக்கு யாழ். மாநகர சபையின் மின்சாரப் பொறியியலாளர் திரு எஸ். நவரத்தினராஜா தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக மராமத்துப் பொறியியலாளர் திரு. எம். ராமதாஸன் கலந்து கொள்வார். (க-111)

## பாடசாலைகளில்

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் இல்லத் தடகள போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. சி. தார்சிசியஸ் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி நாளை புதன் பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த)

## நாளை

சுழிபுரம் பிரதேச சபை சுழிபுரம் வாசகர் வட்டத்திற்கு பொதுமக்களால் வழங்கப்பட்ட நூல்களை பொறுப்பேற்கும் வைபவம் நாளை புதன் பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் நூலகத்தில் நடைபெறும். (த-28)

## அறவழி பயிலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 22

அறவழிப் போராட்டக் குழுவின் அறவழிப் பயிலக திறப்பு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கைதடி நுணாவிலில் நடைபெறும். (த)

---

# தேவை

சித்திரக் கலையில் ஆர்வமுள்ள றீ - ரச்சிங் (Re-Touching), பினிசிங் (Finishing) ஸ்ருடியோ வேலை பழக விரும்புபவர்கள், 05 - 03 - 1994 திகு முன் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

## சித்திராலயா

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-7406]

---

# O/L DAY CLASS

ஆரம்பம்: **28 - 02 - 94**

| யூனிவேர்சல் | நேச்சர் |
|---|---|
| UNIVERSAL | NATURE |
| கந்தர்மடம் சந்தி யாழ்ப்பாணம் | ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம் |

(சி-7401)

---

# DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

4 MONTHS

திங்கள், புதன் வகுப்புக்கள்

**ஆரம்பம்: 28 - 02 - 1994** 10-30 மணி

Lectures By:
S. P. SIVAPATHASUNDARAM
M. I D P M (London)

★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்.
★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூ 400/- மட்டுமே.
★ BASIC கற்கும் மாணவர்களுக்கு Lotus Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை.
★ அச்சடித்த பாடக் குறிப்பு.
★ கூடிய செய்முறைப் பயிற்சிகள்.
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Computer Education)
16, 3rd, CROSS STREET, JAFFNA. [சி-7261]

---

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர்ப் பிரிவு

**25 - 02 - 1994** மு. ப. 9.30 மணிக்கு தையல் பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் யா/ செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

வைபவத்தில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு இரண்டாவது தொகுதிப் பயிற்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பழைய பயிற்சியாளர்களையும், அங்கத்தவர்களையும், தொண்டர்களையும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர், நல்லூர் பிரிவு.

கொக்குவில். 21-02-94. (29565)

---

# விப்ஜியோர் அக்கடமி

SPOKEN ENGLISH WITH GRAMMAR
By
**M. A.** கரி

VIBGYOR

ஆரம்பம்: **22 - 02 - 1994** (செவ்வாய் 3 மணி)
✳ செவ்வாய், வியாழன் 3 மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும்

குளப்பிட்டி வீதி, (மில் அருகில்) ஆனைக்கோட்டை. (29569)

---

# நெல்லியடியில் பொய்க்கால்

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்ற நிதிக்காக கலைப்பீட மாணவர்கள் வழங்கும்

## பொய்க்கால் (நாடகம்)

16 வது தடவையாக மேடையேறுகின்றது.

காலம்:- 23-02-1994 புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி 6.00 மணி (இருகாட்சிகள்)

இடம்:- வட மத்திய மகளிர் கல்லூரி (நெல்லியடி)

**அன்பளிப்பு: 10/-**

விளம்பர அன்பளிப்பு;

**சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை** நெல்லியடி

**ஜமுனா ரேட்ஸ்** நெல்லியடி (29568)

---

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி இரத்தினம் மனோகராதேவி

**21 - 02 - 1994** இல் சிவபதமடைந்த செல்வி மனோகராதேவி எமது சங்கத்தில் ஆற்றிய பணியும், எங்களுடன் பழகிய உறவும் மறக்க முடியாததொன்றாகிவிட்டது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி. (29573)

---

# 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 - 10 - 1922 | 20 - 02 - 1986 |



திருமதி
## செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை
(ஓய்வுபெற்ற அருணோதயாக் கல்லூரி ஆசிரியை)

திதி: 22 - 02 - 1994

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செ. செல்வநேசன், கொலிஜ் வியு, அளவெட்டி. (6992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 'பவுல்' அடிக்கும் ரணில்!

நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் இம்மாதம் யாழ்ப்பாணம் வந்தபோது இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அதற்கேற்ற சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அவற்றின் ஊடாகத் தகவல் தெரிவித்தனர். போர்நிறுத்தம் செய்வதன் மூலமும், பொருளாதாரத் தடையை நீக்குவதன் மூலமும் பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்கலாம் என்றும் புலிகள் யோசனை தெரிவித்தனர். அவை இரண்டையும் கோரிக்கைகளாகவும் முன் வைத்தனர்.

புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா மூலம் அறிந்து கொண்ட ஜனாதிபதி கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்வதாக வாக்குறுதி அளித்தார். இவ்வாறு வாக்குறுதி அளித்த இரண்டு நாட்களிலேயே அவர் தன்னை மாற்றிக்கொண்டார்!

"நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு நான் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேசுவதானால் சகல கட்சிகளும், பெரும்பான்மை இனமும் முடிவு செய்ய வேண்டும்" என்று நடக்கமுடியாத ஒரு காரியத்தை தனது நிலைப்பாடாக வரித்துக் கொண்டார்!

அதன் பின்னர் வழமை போலவே பொதுக்கூட்டங்களில் இனவாதத்தைக் கக்கி வருகிறார். போரை வெல்ல வேண்டும் என்று பேசுகிறார். பலமான ஸ்திரமான ஓர் அரசாங்கம் இருந்தால் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று தேர்தல் பேச்சும் ஆற்றி வருகிறார்.

பெரும்பான்மை இனம் ஒரு விருட்சம் என்றும் சிறுபான்மை இனங்கள் அதனைச் சுற்றிப் படரும் கொடிகள் என்றும் முன்னர் பேசியதை — சிங்கள இனத்தை முதன்மைப்படுத்தியதை — வேறு கதைகள் சொல்லி விளக்குகிறார். அவர் அந்தப் போக்கில் செல்ல —

விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து வரும் சமாதான யோசனைகள் தலைவர் பிரபாகரனிடம் இருந்தே வர வேண்டும் என்று ஒரு முட்டுக்கட்டை போட்டார் ரணில்.

இப்போது —

பேச்சுவார்த்தைகளில் என்னென்ன பிரச்சினைகள் இடம்பெற வேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்று கூறுகிறார்.

பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தட்டிக் கழிக்கும் விதத்தில், தேவையில்லாத ஒரு விடயத்தை முன் வைக்கிறார். பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கிய பின்னரே என்னென்ன குறித்துப் பேசலாம் என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும். அதனை விடுத்து மனைவியின் வயிற்றில் குழந்தை கருத்தரிப்பதற்கு முன்னர் பெயர் வைக்கும் மாப்பிளையாக மாறுகிறார் ரணில்.

அது மட்டுமல்ல. ஆனையிறவுப் பாதையைத் திறந்து விட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளிடம் கேட்கிறார். ஆனையிறவு இராணுவ முகாமை அகற்றினால் அந்தப் பாதையை மக்கள் பயன்படுத்துவதில் எவ்வித தடையும் இருக்காது. அதனைச் செய்யாமல், குதர்க்கமும், விதண்டாவாதமும் செய்கிறார்; தட்டிக்கழிப்பதற்காக.

பந்து தங்கள் பக்கத்துக்கு போய்விட்டதால் அதனை எப்படியாவது "பவுல்" அடித்து இந்தப் பக்கம் தள்ளிவிடும் அரசியல் விளையாட்டு இது.

கிழக்கில் நடக்கும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்கும் வரை இப்படி எதை எதையோ கூறி சமாதானப் பேச்சு நடத்த அரசுக்கு விருப்பம் இருப்பதாகக் காட்டும் நாடகம் இது. உண்மையாகவே பேச்சுவார்த்தையிலும் அரசியல் தீர்விலும் அரசுக்கோ அல்லது ரணிலுக்கோ விருப்பம் இருந்தால் போர் நிறுத்தம் குறித்தே அக்கறை காட்ட வேண்டும்.

---

### 1992 ஆகஸ்டில் தோற்றியவர்களில்

## 8,200 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

1992 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்களில் எண்ணாயிரத்து இருநூறு பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட இருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்முறையாவது பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் —

இடவசதி, நிதி நெருக்கடி காரணமாக கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் அதே எண்ணிக்கையான வர்கள் தெரிவு செய்யப்பட இருப்பதாக — ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு தெரிவாக இருக்கும் உத்தேச மாணவர் எண்ணிக்கையும் பீடங்களும் வருமாறு:-

மருத்துவம் — 823,
பொறியியல் — 620,
உயிரியல் விஞ்ஞானம் — 650,
பௌதிக விஞ்ஞானம் — 1,200,
கலைப் பிரிவு — 2,800
மிருகவியல் — 65,
பல் வைத்தியம் — 75,
விவசாயம் — 320,
சட்டம் — 200,
முகாமைத்துவம் — 620,
வர்த்தகம் — 780

(அ-3-162)

### யாழ். பல்கலைக்கழக வைத்திய, விஞ்ஞான பீடங்களுக்கு

## தெரிவான மாணவர் பட்டியலை உடன் அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ் பல்கலைக்கழக வைத்திய, விஞ்ஞானபீடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலை உடன் அனுப்பி வைக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கோரியுள்ளார்.

1992 ஆகஸ்டில் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளிகள் வெளிவராத நிலையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது போன்று —

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் தெரிவு செய்யப்பட்ட வைத்திய, விஞ்ஞானபீடங்களுக்கான மாணவர்களின் விவரங்களை அனுப்புமாறு துணைவேந்தர் கேட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் போதிய வசதியிருந்தும், கடந்த ஆண்டு தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை போதாது உள்ளதாகவும் —

கடந்த ஆண்டு தெரிவான மாணவர்களுடன் புதிய மாணவர்களும் கல்வி பயில வசதியாக இந்த ஏற்பாட்டை செய்யுமாறும் — துணைவேந்தர் கேட்டுள்ளார். (ஓ-3)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 22

கடந்த மாதம் 5ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் அறிவழகன் அல்லது அறிவு (யேசுதாஸ் றொபின்சன் — குடத்தனை) நேற்று முன்தினம் வீரச்சாவு அடைந்தார். (ஓ-3)

## 6 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வடக்கு-கிழக்கில் பற்றாக்குறை

கொழும்பு, பெப் 22

வடக்கு - கிழக்கில் 6 ஆயிரம் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை சீனக்குடா அரசினர் தமிழ் வித்தியாலய மாணவர்களால் வெளியிடப்பட்ட 'கலையாழி' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் எஸ். யோகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பணிப்பாளர் மகாலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது;

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்விப் போதனையை வழங்குவதுடன் மட்டும் நின்று விடாது புறக் கல்விக்கான வழிவகைகளையும் வகுக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் நமக்கு பொறியியலாளர்கள், வைத்தியர்கள் மட்டுமன்றி பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றோரின் தேவையும் அவசியமாகும்.

கல்வித்துறையில் இலங்கை உலக நாடுகளில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. நாட்டில் 86 வீதமானோர் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எஞ்சிய 14 வீத மாணவர்களும் இந்த நூற்றாண்டின் இறுதியில் கல்விப் போதனையைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி அவர் கூறினார்.

## சித்த வைத்திய மருந்துகளை புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும்

### ஆய்வரங்கில் யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், பெப். 22

இன்று எம்மத்தியில் உணவு மற்றும் தொழில் பழக்க வழக்கங்கள் முன்னரைப் போன்று அல்லாது மாறிவிட்டன. இதனால் சித்த வைத்திய துறையிலும் ஆராய்ச்சிகள் செய்து புதிய மருந்து வகைகளைக் கண்டு பிடிக்கவேண்டும்."

யாழ். மாவட்டத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 13 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற "சித்த வைத்திய ஆய்வரங்கும் ஈழத்தின் சேவையில் மூத்த சித்த வைத்தியர்களைக் கௌரவித்தலும்" என்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சித்த வைத்திய கலாநிதி திரு. சோ. சபாநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திட்டப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றும் கிராமப்புற மக்களின் நம்பிக்கைக்குரிய வைத்தியமாக சித்த வைத்தியம் இருக்கின்றது. இருந்தபோதிலும் இவ்வைத்தியத்தியத்தில் உணவுப் பத்தியம் என்ற கட்டுப்பாட்டுடன் மூலிகைகள் கொண்டதாக இருப்பதால் பெரும்பாலானோர் மேற்கத்தைய வைத்தியத்தையே நாடிச்செல்கிறார்கள். நீண்டகாலத்திற்கு நோய் வராமல் தடுக்கும் வல்லமை கொண்ட சித்த வைத்தியத்திற்கான மருந்து உற்பத்தி அற்றுப் போய்க்கொண்டிருக்கிறது.

சித்தர்களால் பாடப்பெற்று அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வரும் இவ் வைத்தியத்தை நாம் கைவிடக்கூடாது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவக் குழுவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திரு. சூரி தமது உரையில் கூறியதாவது;

இன்றைய விஞ்ஞான உலகில் வளர்ந்து வரும் ஆங்கில வைத்தியத்துடன் போட்டி போட்டு வளர்வதற்கு சித்த வைத்தியத்திலும் வேண்டிய ஆய்வுகள் செய்து அவற்றை உலகிற்கு கொண்டு வருதல் வேண்டும்.

வியாபார நோக்கில் தற்போது பல சித்த மருந்துகள் விற்கப்படுவதால் அவற்றின் தரம் குறைவாக இருக்கிறது. இதை தவிர்க்கவென சித்த மருத்துவக் கட்டுப்பாட்டுச் சபை ஒன்றை அமைத்து மருந்துகளின் தரம் கவனிக்கப்படல்வேண்டும்.

இவ் வைத்தியத்திற்கு தேவையான மருந்து மூலிகைகளை பெறுவதற்கு அன்னியர் கைகளில் தங்கியிருப்பது எங்கள் கைகளில் தங்கியிருப்பதற்கு மூலிகைகளை இங்கேயே உற்பத்தி செய்யவேண்டும். சித்த வைத்திய ஏடுகள் சேகரித்து பராமரிக்கப்படல் வேண்டும் என்றார்.

மங்கள விளக்கேற்றல், மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் முன்னதாக சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தின் ஆலோசகர் திரு. க. கோபாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஈழத்தின் சேவையில் மூத்த சித்தவைத்தியர்களான சித்தமருத்துவ கலாநிதிகள் திரு. க. இராமசாமி, திரு. ஆ. நடராசா திரு. வி. சின்னப்பு, திரு. பேபிலிப், திரு. என். பத்மநாதன் ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்தி "வைத்திய இரத்தினம்" என்ற விருது வழங்கி யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை துணைத் தலைவர் திருமதி பவானி கௌரவித்தார்.

ஆய்வரங்குகளை சித்த வைத்திய கலாநிதிகள் திரு பி. இராமநாதன், திரு ஏ. வி. இராசரெத்தினம், திருமதி மி. சிறிகாந்தா, திரு. செ. சுந்தரலிங்கம், திரு. வ. சின்னப்பு, திரு வி. பாலகிருஷ்ணன் ஆகியோர் நடத்தினர்.

இறுதியில் மேற்படி சங்கத்தின் நிதிச் செயலாளர் திரு செ. சுந்தரலிங்கத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. (க-162)

## உணவு, பொருள்கள் கொள்வனவு; முற்பணத்தை தொடர்ந்து வழங்குக!

### நிறைசேரியிடம் அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்குரிய முற்பணத்தை தொடர்ந்து வழங்குமாறு நிறைசேரியை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கான உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கு இனி முற்பணம் அனுப்பினால் மட்டுமே அவை அனுப்பப்படும் என நிதி அமைச்சு செயலாளரின் புதிய அறிவிப்புக் குறித்து கேட்டபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்போதுள்ள சூழ்நிலையில் நிறைசேரி, முன்பு இருந்த நடைமுறைப்படி தொடர்ந்து பொருள்களுக்கான முற்பணத்தை அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு வழங்க வேண்டும் என்று அரச அதிபர் நிறைசேரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதேவேளை —

யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் —

வடக்கே வரும் கப்பல்களில் உணவுப் பொருள்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் — யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள திட்டப் பணிப்பாளரை இவ்விடயங்கள் குறித்து அதிகாரிகளுடன் பேசுமாறு தாம் கேட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (ஓ-3)

### முல்லைத்தீவில் சூரியகாந்தி செய்கை

முல்லை மாவட்டத்தில் தட்டாமலை பகுதியில் சூரியகாந்தி மற்றும் நிலக்கடலைப் பயிர்கள் செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 59 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இப்பயிர்ச் செய்கை மூலம் பெறப்பட்ட விதையை கொண்டு, எதிர்வரும் காலங்களில் இவ் உற்பத்தியை விரிவாக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சந்திரசேகரனின் வழக்கு விசாரணைக்கு உத்தரவு

### 24 ஆம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, பெப். 22

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் மீதான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து விசாரிக்கப்படும் என்று பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. வீரசூரியா உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணையை ஆரம்பிப்பதை இனியும் ஒத்திவைக்க அனுமதிக்க முடியாது என்று சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சோலிதா தர்மவர்த்தனாவிடம் நீதிபதி தெரிவித்தார்.

91 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம்திகதி கொழும்பில் இடம்பெற்ற கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீதான தாக்குதல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபரான வரதனுக்கு புகலிடம்அளித்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்திரசேகரன் மீது சட்டமா அதிபர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வழக்கு அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தைப் பதிவு செய்யுமுகமாக விசாரணையை இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று அரச சட்டத்தரணி விண்ணப்பித்தார்.

விண்ணப்பத்தை அனுமதித்த நீதிபதி இனியும் இவ்வழக்கு விசாரணையை ஒத்திவைக்க முடியாது என்றும் பெப்ரவரி 24 இல் விசாரணை ஆரம்பமாகும் என்றும் அறிவித்தார். [ஓ-எ]

### போஞ்சி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். குடாநாட்டில் பச்சைப் போஞ்சி இம்முறை அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளது. கிலோ பச்சைப் போஞ்சி 15 ரூபாவாக விற்கப்படுகின்றது. (இ-17)

## நோயாளியின் வயிற்றில் முள்ளுக்கரண்டி, கத்திகள்!

### டாக்டர்கள் அகற்றினர்!!

ஜகார்த்தா, பெப். 22

நோயாளி ஒருவருக்கு வயிற்றில் இருந்த முள்ளுக்கரண்டி, சமையலறைக் கத்திகள், மேசைக்கரண்டி மற்றும் பட்டர் துண்டாக்கும் உபகரணம் போன்றவற்றை டாக்டர்கள் சத்திர சிகிச்சை மூலம் அகற்றினர்!

இந்தோனேஷியாவின் விடுமுறை தீவான பாலியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஐந்து டாக்டர்கள் இணைந்து சுமார் இரண்டு மணிநேரம் இந்த சத்திர சிகிச்சையைச் செய்தனர்.

மனநோயாளியாக முன்னர் இருந்ததாக கூறப்படும் பிரஸ்தாப 24 வயதுடைய சுதர்சனா என்ற இளைஞர் வங்கி ஊழியராகவும் கடமை புரிந்துள்ளார்.

இவ்வளவு பொருள்களையும் அவர் விழுங்கியதற்குக் காரணம் அவரது சித்த சுவாதீனமற்ற நிலையே என டாக்டர்கள் கூறினர். (ஓ-3)

## நெல் அறுவடைக்குப்பின் வயலில் சணல் விதைப்பு

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள விவசாயிகள் சிலர் நெல் அறுவடையின் பின்னர் தமது வயல்களில் சணல் விதைக்கின்றனர்.

உப உணவுத் தானியங்களான எள்ளு, பயறு, சோளம் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள சில வயல் நிலங்களிலேயே சணல் விதைக்கப்படுகிறது. (இ-175)

### தமிழகத்தில் தங்கியிருந்தும்

## அகதிகளை ஏற்றி வர மற்றொரு கப்பல்

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளை மன்னாருக்கு அழைத்துவர மற்றுமொரு கப்பலை சேவையில் ஈடுபடுத்த அரசு முயற்சி எடுத்துள்ளது.

தற்போது தமிழகத்தில் இருந்து மன்னாருக்கு அகதிகளை அழைத்து வருவதற்கு "ராமானுஜம்" கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் அகதிகள் பலரை இங்கு அழைத்து வர இருப்பதால் மற்றொரு கப்பலையும் சேவையில் ஈடுபடுத்தும் சாத்தியம் குறித்து ஆராயுமாறு மன்னார் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் கடந்த ஜனவரியில் இருந்து ஆறு கட்டங்களில் 3ஆயிரத்து 63 அகதிகள் தமிழகத்தில் இருந்து மன்னாருக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## அகதிமுகாம் குடிசைகளை திருத்துவதற்கு நடவடிக்கை

முற்றாகப் பழுதடைந்துள்ள மானிப்பாய் அந்தோனியார் அகதிமுகாம்களிலுள்ள குடிசைகளை திருத்தி அமைக்கும் பணியை யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் துரிதமாக செய்து வருகிறது.

குடிசைகள் பழுதடைந்து வருவதால் சண்டிலிப்பாய் பிரிவு உதவி அரச அதிபர் பணிமனையில் வழங்கும் நிதியைக் கொண்டு குடிசைகளை புனரமைக்கும் பணியில் மனித முன்னேற்ற நடுநிலையம் ஈடுபட்டு வருகிறது.

இதேவேளை 215 குடிசைகளிலும் தங்கவைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கும் மாதந்தோறும் 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களையும் மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கி வருகிறது. (ஓ-151)

## அரசு எம்மை பகடைக் காயாக பாவிப்பதற்கு நினைக்கிறது

### தொண்டமான் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 22

"கடந்த 27 வருடங்களாக நாம் அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து வந்தோம். — அரசாங்கத்துக்கு பயந்து கொண்டோ அல்லது வேறு எவருக்காவது பயந்து கொண்டோ நாம் அரசாங்கத்துக்கு ஆதரவு தரவில்லை. எமது உரிமைகளை பெற்றுக் கொள்ளவே நாம் அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்தோம். ஆனால் அவர்கள் எம்மை பகடைக் காய்களாக பாவிக்கலாம் என நினைத்துக் கொண்டார்கள் அந்த ஜம்பம் பலிக்காது."

இப்படிக் கூறினார் இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான்.

இறக்குவானையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

தொண்டமான் எல்லாவற்றையும் வாங்கப் போகிறார், வாங்கப் போகிறார் என நினைத்து ஹெல உறுமய' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள் அந்த இயக்கம் அரசையும் எம்மையும் பிரிக்க சதி செய்தது அந்த 'ஹெல உறுமய' காரர்களின் கோஷங்களுக்கு இன்றைய ஆட்சிபீடம் அடிபணிந்து விட்டது.

அரசு எம்மை மதித்தால் நாங்களும் அரசை மதிப்போம். அரசு எம்மை எதிர்த்தால் நாமும் எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை—

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-3-5-162)

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்தா தம்பிப்பிள்ளை மீனாட்சி

காரைநகர் முந்துவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி முத்தா தம்பிப்பிள்ளை மீனாட்சி காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (சிங்கப்பூர் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. நடராஜா (கணக்காளர் கொழும்பு), தனபாக்கியவதியின் தாயாரும், சேதுப்பிள்ளையின் பாசமிகு சகோதரியும், நேசம்மாவின் அன்பு மாமியாரும், சச்சிதானந்தன், சிவானந்தன், நந்தினி, கருணாநிதி (மெமோறியல் மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10 மணியளவில் உடுவில் வீதி, மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள் இவ்வறித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனபாக்கியவதி
(மகள்)

(6991)

## சி. செல்லத்துரை

(முன்னாள் அதிபர்)

(பனிப்புலம், பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு அரசடி வீதியில் குடியிருந்தவரும் பண்ணாகம் வடக்கு அ மி த. க பாடசாலையின் முன்னாள் அதிபருமான சி. செல்லத்துரை 21. 02. 94 இல் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசா (லண்டன்), சந்திரகாசன் (அவுஸ்திரேலியா), மனுவேந்தன் (கனடா), காலம் சென்ற புனிதமலர், மற்றும் கமலாம்பிகை, செல்வமலர் (கொழும்பு), கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான சிவநேசன் (சுங்கத் திணைக்களம்), சுப்பிரமணியம் (பொலீஸ் உத்தியோகத்தர்), முருகேசு (பொலீஸ் உத்தியோகத்தர்) மற்றும் தவராசசிங்கம் (இ. போ. ச. சாலைப் பொறுப்பாளர் — காரைநகர்), விஜயலட்சுமி (லண்டன்), புஷ்பராணி (அவுஸ்திரேலியா), சந்தானலட்சுமி ஆகியோரின் மாமனாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 22-2-94 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 2 மணியளவில் சம்பில்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தவராசசிங்கம்
(மருமகன்)

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(29572)

## திருமதி அன்னமுத்து சுப்பிரமணியம்

நீர்வேலியைச் சேர்ந்த திருமதி அன்னமுத்து சுப்பிரமணியம் அவர்கள் 21-02-1994 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைரமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையவர்-மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், தம்பிஐயா (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்), அழகரத்தினம் இராசதுரை, துரைராஜா (பொலீஸ் அத்தியட்சகர், மருதானை), நேசம்மா பவளராஜா, தங்கராஜா (பொலீஸ் அத்தியட்சகர், கொழும்பு), ஆனந்தராஜா (மோட்டோ மெக்கானிக்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளேஸ்வரி தம்பிஐயா, இராசதுரை (வர்த்தகர்), புஷ்பராணி துரைராஜா, காலஞ்சென்ற பவளராஜா (சுங்க இலாகா உதவி கலெக்ரர்), கமலராணி தங்கராஜா, கலாராணி ஆனந்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-02 94) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சு. த. ஐயா.
(மகன்)

60/8, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

(6985)

## கலாநிதி K. S. நடராஜா

(நவற்குழி)

(ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளரும் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன பணிப்பாளரும்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான கலாநிதி K. S. நடராஜா நாவற்குழியூர் நடராஜன்) கடந்த வியாழக்கிழமை (17-02-94) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு க. செல்லப்பா, அன்னம்மா அவர்களின் அன்புப் புத்திரனும், தங்கராணி (முன்னாள் பகுதித் தலைவர் — ...) ... பாடசாலையின் ... வத்சலாதேவி (கனடா) மகிழன் ... Accountant) ஆகியோரின் அன்புத்தந்தையும் D. K. ... (Engineer கனடா) மாலதி ... ஆகியோரின் அன்பு மாமனாரும், ... P. W. D ஓய்வுபெற்ற) அவர்களின் அன்பு மைத்துனரும், ... கரன், சுதாகரன், பிரவீனா, அஞ்சலா அரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
துவாரகன்
(மருமகன்)

10, Stonehill Court 301
Scarborough, Ontario
M1W 2x8
Canada

(6990)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், பெப். 21

கொழும்புத்துறை ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ ஏழாம் திருவிழா நாளான இன்று மூத்த சமய விரிவுரையாளர் "மெய்ஞ்ஞானவாரிதி" பிரம்மஸ்ரீசபாரத்தின ஈஸ்வரசர்மா "விநாயகனே வேரறுக்க வல்லான்" என்னும் பொருளில் ஆன்மீக உரை நிகழ்த்துவார். (அ)

## குழந்தை பலி

யாழ்ப்பாணம், பெப். 21

செப்ரிசீமியா நோயால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றும் ஒரு குழந்தை பலியானது.

உடுவில் ஆலடி அகதி முகாமைச் சேர்ந்த அலுசையா கரேந்தா (வயது 4) என்ற குழந்தையே நேற்று மரணமானது. (உ-15)

## பாணின் விலை அதிகரிப்பு

பாணின் விலை இன்று முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கப்பல் கட்டணத்தை அறவிடுவதற்காக மாவின் விலை கிலோவுக்கு 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதை அடுத்தே பாணின் விலை அதிகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

350 கிராம் நிறை கொண்ட பாண் இன்று முதல் 9 ரூபாவாக விற்பனை செய்யப்படும். (உ-5 51-162)

## கண்காட்சி ஆரம்பம்

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறையினர் ஏற்பாடு செய்துள்ள சித்த மருத்துவக் கண்காட்சி கைதடியில் உள்ள சித்த மருத்துவத்துறை வளாகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்றுக் காலை 9 மணிக்கு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக கலை பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

12 காட்சிக் கூடங்களைக் கொண்டுள்ள இக் கண்காட்சியை பல நூற்றுக்கணக்கானோர் நேற்று பார்வையிட்டனர். கண்காட்சி எதிர்வரும் புதன் கிழமை வரை தொடர்ந்து நடைபெறும். (உ 5-162)

மண்டூப...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுடன் பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் இராணுவ நடவடிக்கை தலைமையகப் பேச்சாளர், தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்வர்.

50 தலைமுறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியப்படவில்லை இந்த யுத்தத்தை ஒரு வியாபாரமாக்கிக் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

வடக்கில் உள்ளது பயங்கரவாதமே என்று ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் திரு பரபாகரனுடன் பேச்சு நடத்த அரசு கதவைத் திறந்து வைத்துள்ளது என பிரதமர் கூறிவருகிறார். இப்படியான முரண்பாடு அரசுக்குள் இருக்கும் போது எப்படி இந்த யுத்தத்தை முடிவுக்கொண்டு வர முடியும்?

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை இறக்குமதி செய்ய அரசு ஆதரவாளர்களுக்கு ஏகபோக உரிமை வழங்கப்பட்டுள்ளது 16 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சீனியை 30 ரூபாவுக்கு விற்க அவர்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது" — என்றும் அவர் கூறினார். (உ-எ-6)

443 தபால்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கன் ... — கோமாரி கப்பல் பருத்தித்துறைக்கு வரும் என்றும் —

அதன் பின்னரே கப்பலில் உள்ள எஞ்சிய பொருள்கள் இறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

மாற்றி ... 'ஹெந்தல' கப்பலில் இந்த யா இறக்கும் வேலை ... துறையில் ... கொள்ளப்பட...

# எழுதுவினைஞர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை இங்கு!

மத்திய அரசின் கீழ் உள்ள திணைக்களங்களில் எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

கடந்தவருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் 14 பேருக்கு கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு தொகுதியாக 38 பேருக்கு நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடக்க விருப்பதாகவும் —

இவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் கடிதங்கள் இவ்வாரத்தில் அனுப்பப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —

இப் போட்டிப் பரீட்சையில் தோற்றி — வன் செயல் பாதிப்புக்குள்ளானவர்களில் - தெரிவான 28 பேரின் விவரங்கள் தற்சமயம் செயலகத்தால் சேகரிக்கப்பட்டு வருகிறது.

விவரங்கள் சேகரிக்கப்பட்டதும் அவை கொழும்புக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பயிற்சி முகாம் வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு கிழக்கு மாகாண சபை கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்படும் யாழ் மாவட்ட மெய்வல்லுநர், உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் வகுப்புகள் எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பேராசிரியர்
   உடலமைப்பியல்/நோயியல்/சட்ட மருத்துவம்/மனநோயியல்/மருந்தியல்/குழந்தை மருத்துவம்/அறுவை மருத்துவம்/சமூக மருத்துவம்.
2. அறக்கொடைத்த விசுஅங்கக் கோணல் அறுவை மருத்துவம்/கழலையியல்.
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
   விரிவுரையாளர் —
   உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம்/உயிரிரசாயனவியல்/உடலமைப்பியல்/நோயியல்/சட்ட மருத்துவம்/மருந்தியல்/மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/அறுவை மருத்துவம்/நுண்ணுயிரியல்/ஒட்டுண்ணியியல்.
4. தற்காலிக விரிவுரையாளர் —
   உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம்/உயிரிரசாயனவியல்/உடலமைப்பியல்/நோயியல்/சட்ட மருத்துவம்/மருந்தியல்/மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/அறுவை மருத்துவம்/நுண்ணுயிரியல்/ஒட்டுண்ணியியல்.
5. தற்காலிக உதவி விரிவுரையாளர் —
   அணு மருத்துவம் (பௌதீகவியல்)
6. தற்காலிக செய்முறை காட்டுநர் —
   உயிரிரசாயனவியல்/நோயியல்.
7. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர்:
ரூபா 16,100 - 6 X 400 - 18 500/- மாதமொன்றிற்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10,650 - 5 X 325 - 12 275/- மாதமொன்றிற்கு

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6,050 - 10 X 250 - 8,550/- மாதமொன்றிற்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 6050/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக ... 6550/- ரூபா சம்பளத்தில் ... வேண்டும்)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6550/-மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக செய்முறை காட்டுநர்:
ரூபா 4420/-மாதமொன்றிற்கு (நிலையானது)

பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி:
ரூபா 7,300 — 10X 250; 10 X 325 — 13,050 மாதமொன்றிற்கு

குறிப்பு:
இத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1994-05-11 இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1994-03-25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானபடியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:
ஒப்பந்த அடிப்படையான நியமனமும் கவனிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
15-02-1994

[சி-7263]

## வடக்கு மீதான பொருளாதாரத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதை அரசு ஏற்கனவே கூறியுள்ளது. இவ்வாறு சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதியை அரசாங்கம் நீடித்துள்ளது. எனினும் விடுதலைப் புலிகளிடமிருந்து எந்தவித பதிலும் இல்லை.

என்ன என்ன பிரச்சினைகள் விவாதிக்கப்படவேண்டும், யார் பேச்சுகள் நடத்துகின்றார்கள் என்பது அடிப்படையான விஷயம். பேச்சுவார்த்தைக்கு முன்னால், எது குறித்துப் பேசப் போகிறோம் என்பதனைப் புலிகள் முதலில் தெரிவிக்கவேண்டும்.

கடந்த ஆண்டு இராணுவம் பல பின்னடைவுகளை சந்தித்த போதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மேலும் பல பகுதிகளைக் கொண்டு வரும் முயற்சி இந்த ஆண்டும் தொடரும். — என்று கூறினார். (அ-எ-த)

## சாவகச்சேரியில் சிறுவர் நூலகத் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய சிறுவர் நூலகத் திறப்பு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா "சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்" எனும் பொருள் பற்றி உரையாற்றுவாரர். (ச)

# மரண அறிவித்தல்கள்

## எஸ். எம். எலிசம்பிள்ளை

செய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த எஸ் எம். எலிசம்பிள்ளை 19 - 02 - 1994 இல் காலமாகிவிட்டார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அன்னம்மா ஆகியோரின் புத்திரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, நேசம்மா ஆகியோரின் மருமகனும், குணரெட்ணம் (பெரியவிளான்), ரஞ்சினி, றெஜினா, ராணி, திலகரெட்ணம், பிறேமா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயா, பொன்ராசா, சாள்ஸ் மத்தியூஸ், அன்ரன், கண்ணதாசன் ஆகியோரின் மாமனாரும், நல்லையா, காலஞ்சென்ற அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேவி, நவமணி, ஞானபுஷ்பம், றோஸ்மலர், அருமைத்துரை, கிளி, அரியரெட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக, 24 - 02 - 1994 வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு இல. 57, பழைய பூங்கா வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பரிசுத்த சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சாள்ஸ் மத்தியூஸ்

57, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

[29561]

## சீனிவாசகம் சின்னத்தங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் சின்னத்தங்கம் அவர்கள் 21 - 02 - 1994 திங்கட்கிழமை காலமானார் இவர் சீனிவாசகத்தின் அன்பு மனைவியும், கனகம்மா, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, சின்னம்மா, இராஜலஷ்சுமி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, பவளம்மா, பத்மாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்து, பொன்னுத்துரை, சத்தியலஷ்சுமி, யோகராஜா, அன்ரனி, பத்மனாதன், தனபாலசிங்கம், ரவீந்திரன், தவயோகராஜா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை (22 - 02 - 94) பிற்பகல் 1 மணியளவில் சண்டிலிப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சீ. கணபதிப்பிள்ளை
(மகன்)

சண்டிலிப்பாய்.
(29571)

## அப்புக்குட்டி செல்லர்

K. K. S. வீதி கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த அப்புக்குட்டி செல்லர் 18-2-94 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், பூமணி, சின்னமணி, இராசமணி, காலஞ்சென்ற கந்தசாமி, சிவபாதம் (கட்டட ஒப்பந்தக்காரர்), சற்குணம் (உரிமையாளர், கதிரமலை ஆனந்தன்), வீரசிங்கம் (கிஸ்ணா தச்சுத் தொழிலகம்), பொன்ராசா (ஜேர்மனி), மனோன்மணி, ஆனந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற முத்துராசா, பொன்ராசா, புவபராணி, பூமணி, ராணி, திலகவதி, இராசேஸ்வரி விமலசந்திரன் (ஜேர்மனி), றோசனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக (புதன்) 23-2-94 அன்று 10 மணியளவில் கரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

கோண்டாவில் மேற்கு.

(29570)

## திருமதி நடனசுந்தரம் லோகேஸ்வரி

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் 309. அரசடி வீதி கந்தர் மடத்தில் வசித்தவருமான திருமதி நடனசுந்தரம் லோகேஸ்வரி நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை — சிவக்கொழுந்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், விசுவலிங்கம் நடனசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சொர்ணம்மா, கோணேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, செந்தில்நாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று பிற்பகல் 3 மணியளவில் அரசடி வீதி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. திருநாவுக்கரசு
(பெறாமகன்)

309, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(29574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org